# 5. கடவுள் ஒருவரே நம் துணை

புவியையும் அதிலுள்ள அனைத்தையும் தனது அன்பினாலும் ஆற்றலினாலும் படைத்த கடவுள், படைப்பின் சிகரமாக மானிடரான நம்மையும் உருவாக்கினார். கடவுளின் அன்பும் பிரசன்னமும் மனிதருடன் எப்போதும் கூடவே இருக்கிறது.

மெசியாவின் பிறப்பைக் குறித்து கடவுள், இறைவாக்கினர் வார்த்தைக் கூடாக உரைத்ததை நற்செய்தி நூலில் வாசிப்போம்.

> 'இதோ, கன்னி கருவுற்று ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு, இம்மானுவேல் எனப்பெயரிடுவார்' மத்தேயு 1:23

'இம்மானுவேல்' என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார் என்பது பொருளாகும்.


பல வேளைகளில் நாம் நெருக்கடியான சூழ்நிலைகளை எம் வாழ்வில் சந்தித்திருப்போம். அவ்வேளைகளில் கடவுள் நம்மோடு இம்மானுவேலனாய் இருப்பதை உணர்ந்திருக்கிறீரா?




## நன்நம்பிக்கையின் திருப்பாடல்

இஸ்ரவேலர், தங்கள் ஆசாரியர் தலைமையில், சீயோன் மலையில் அமைந்திருக்கும் பேராலயத்திற்கு, புனிதப் பயணம் செல்லும்போது ஆசாரியரும் மக்களும் முறை, முறையாகப் பாடும் நன்நம்பிக்கையின் திருப்பாடலை வாசிப்போம்.

## திருப்பாடல் 121



மலைகளை நோக்கி என் கண்களை உயர்த்துகின்றேன்! எங்கிருந்து எனக்கு உதவி வரும்?

விண்ணையும் மண்ணையும் உண்டாக்கிய ஆண்டவரிடமிருந்தே எனக்கு உதவி வரும்.

அவர் உன் கால் இடறாதபடி பார்த்துக்கொள்வார்.

உம்மைக் காக்கும் அவர் உறங்கவிட மாட்டார். இதோ! இஸ்ரவேலைக் காக்கிறவர் கண்ணயர்வதுமில்லை, உறங்குவதும் இல்லை.

ஆண்டவரே உம்மைக் காக்கிறார். அவர் உம் வலப்பக்கத்தில் உள்ளார். அவரே உமக்கு நிழல் ஆவார்!

பகலில் கதிரவன் உம்மைத் தாக்காது. இரவில் நிலாவும் உம்மைத் தீண்டாது.

ஆண்டவர் உம்மை எல்லாத் தீமையினின்றும் பாதுகாப்பார். அவர் உம் உயிரைத் காத்திடுவார்.


நீர் போகும் போதும், உள்ளே வரும் போதும், இப்போதும் எப்போதும் ஆண்டவர் உம்மை காத்தருள்வார்.

### இத் திருப்பாடல் நமக்கு எதனைக் கற்றுத் தருகின்றது?

- நெருக்கடியான சூழ்நிலைகளில் நாம் கடவுளை நோக்கிப் பார்க்கவேண்டும்.
- ஆசீர்வாதம், கவனிப்பு, பாதுகாப்பு ஆகியன முழு உலகத்தைப் படைத்த கடவுளிடமிருந்து நமக்குக் கிடைக்கின்றது,
- கடவுள் எப்போதும் நம்முடன் கூடவே இருந்து போசித்து வழிநடத்துகிறார்.
- இரவிலாகிலும் பகலிலாகிலும், எத் தீமையும் நேரிடாது நம்மை பாதுகாத்து, தீமைகளை நன்மையாக கடவுள் மாற்றுகிறார்.
- சீவிய நாட்கள் முழுவதும் நமக்கு வழிகாட்டலைத் தந்து, தமது நித்திய அன்பைக் காட்டுகிறார்.
- கடவுள் நமது இன்னல்கள் அனைத்திலும் ஆறுதல், ஒத்தாசை தருகிறார். நாமும் இன்னல் இருக்கும் மக்களுக்கு இத் திருப்பாடலின் அனுபவத்தால் ஆறுதல் அளிக்கலாம்.

இத்திருப்பாடலின் அடிப்படையில் உமது நாளாந்த அனுபவங்களை நண்பருடன் பகிர்ந்து, கடவுளுக்கு துதியை ஏறெடுங்கள்.

ஆதிப்பெற்றோராகிய ஆதாமும் ஏவாளும், ஏதேன் தோட்டத்தில் வசித்த போது கடவுளின் பிரசன்னத்தையும் கடவுளின் படைப்பின் மூலம், கடவுளின் அன்பையும் பாதுகாப்பையும் பெற்றார்கள். கடவுளின் கட்டளைக்கு கீழ்ப்படியாது, தோட்டத்தை விட்டு வெளியேற நேரிட்டபோதும், அன்பின் சிகரமான கடவுள் அவர்களை ஆசீர்வதித்துப் பாதுகாத்தார். குளிர் வெப்பத்திலிருந்து பாதுகாக்க தோலுடையை அணிவித்ததுடன், நல் விளைச்சல் மூலம் உணவு பெற வெயில் மற்றும் மழையைப் பொழிவித்து, படைப்பின் மூலம் தன் அன்பைக் காட்டினார்.



## படைப்புகளைப் பாதுகாப்போம்.

கடவுள் அன்புடன் நம்மோடு வாழ்கிறார் என்பதற்கு படைப்புகள் சான்று பகர்கின்றன. இறைபடைப்பான இப்புவியை பண்படுத்தவும், நாம் பாதுகாக்கவும் வேண்டும் என்பது இறை கட்டளையாகும்.

கடவுள் ஆதாமுக்கு கொடுத்த கட்டளையை வாசிப்போம்.

**தொடக்கநூல் 2: 15**

**ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும், பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்.**

மானிடர் தனது சுயநல மிகுதியால் படைப்புகளைப் பொறுப்பற்ற வழியில் அழித்து வருகிறார்கள்.

மானிடர் படைப்புகளை அழிக்கும் செயல்பாடுகளை உம்மால் கூற முடியுமா?

கடவுள் இவ்வழகான படைப்புளை அறிவுப் பூர்வமாகப் பயன்படுத்தி பாதுகாக்கும் பொறுப்பை மாந்தராகிய நம்மிடம் ஒப்படைத்துள்ளார். நாம் கடவுளின் விருப்பை நிறைவேற்றி, படைப்புகள் அழிந்து போகாதவாறு பாதுகாப்போம்.

## சிந்தியுங்கள்

- கடவுள் நம்மோடு வாழ்கிறார்.
- கடவுளின் அன்பையும் ஆற்றலையும் படைப்புக்களில் காணலாம்.
- நாம் படைப்புக்களை பொறுப்போடும், கரிசனையோடும் பாதுகாத்து பராமரிக்க வேண்டும்.

## செயற்பாடு

1. உமது தேவையின் போது, நீர் கடவுளை நோக்கி விண்ணப்பித்த சந்தர்ப்பத்தையும், பெற்றுக்கொண்ட, பாதுகாவல் ஆசீர்வாதம் பற்றிய அனுபவத்தையும் எழுதுக.

2. ஆபத்து நிறைந்த சூழலில் பயத்துடன் இருக்கும் உமது நண்பனுக்கு கடவுள் ஒருவரே துணை என்பதைத் திருப்பாடல் *121* மூலம் விளக்கி, நம்பிக்கையளிக்கும் கடிதம் எழுதுக.

1. பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துவதன் மூலம், மனிதரின் தேவைகளால் ஏற்படும் அழிவுகளையும், கிறிஸ்தவர்களாகிய நாம் அவற்றைத் தவிர்க்கும் செயல்பாடுகளையும் முன்வைக்கவும்.

| | மனிததேவைகள் | மனிதனின் சுயநலச் செயல்பாடுகள் | அழிவுகளைத் தவிர்க்கும் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| 1. | கட்டடங்கள் அமைத்தல் | காடுகளை அழித்தல் | மீளக்காடாக்கல் / மரங்களை நடல் |
| 2. | தோலால் செய்யப்பட்ட சப்பாத்து, செருப்பு, பைகள் பாவனை | | |
| 3. | தொழிற்சாலைகள் அமைத்தல் | | |
| 4. | யானைத்தந்த அலங்காரப்பொருட்கள் | | |
| 5. | சேனைப் பயிர்ச்செய்கை | | |

2. படைப்பு பற்றிய பாடல் ஒன்றைத் தெரிவு செய்து பாடுக.